DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெள்ளிகிழமை 06ம் நாள் சாட்சியாகிய சாயாவதி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாயாவதி | வயது | 58 |
| க/பெ. | முனிரத்தினம் | இனம் | பெண் |
| கிராமம் | வளர்புரம் | தொழில் | சொந்த தொழில் |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C. 5/2021**

(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**<u>குறுக்கு விசாரணை எதிர்மனுதாரர் தரப்பில் 06.12.2024 ம.சா.2</u>**

1. எனக்கு எவ்வளவு வருமானம் வருகிறதற்கு என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது என்பதால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு வருமானம் வருவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் நான் ஒட்டல் கடை நடத்திவருகிறேன். நேரில் வந்து பார்த்துக்கொள்ளலாம்.

2. நான் ஒட்டல் நடத்தி வருவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. மனுதாரர் எனக்கு என்ன உறவு என்றால் சகோதரி.மனுதாரருக்கு எவ்வளவு நகை போட்டோம் என்றால் 30 சவரன் போட்டோம். சார்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது நகைகளை கடையில் வாங்கியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சாட்சியத்தில் தெரிவித்தது பற்றி ஞாபகம் இல்லை.

3. நகைகளை எங்கு வாங்கினேன் என்றால் எனது அம்மா மற்றும் எனக்கு போட்ட நகைகள் அவை. நகைகளை கடையில் வாங்கினேன். நான் நகைகளுக்கு இரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி எதுவும் கட்டவில்லை என்றால் சரிதான்.

4. நான் ஒட்டல் வியாபாரம் செய்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு நகை போட்டதாக தெரிவித்தது பொய் என்றால் சரியல்ல. நான்

தான் திருமணம் செய்து வைத்ததாக தெரிவித்துள்ளது பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தான் திருமண செலவுகளை செய்தார் என்றால் சரியல்ல.

5. பள்ளூர் கிராமத்தில் உள்ள கிருஷ்ணா சுவீட்ஸ் கடையை நெடுஞ்சாலை துறையினர் இடித்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதற்கு அரசாங்கத்தில் பணம் கொடுத்துள்ளார்கள். அந்த கடைக்கும், எதிர்மனுதாரருக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், அந்த கடை எதிர்மனுதாரரின் அண்ணனுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல.

6. அந்த கடையில் மனுதாரர் எந்த சமயத்தில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. கடையை இடித்ததற்கு அரசாங்கத்தில் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.சைக்கில் ஸ்டேண்ட் எதிர்மனுதாரர் நடத்தவில்லை என்றாலும், மனுதாரர் அதில் வேலை செய்வதகாக தெரிவிப்பது என்றால் சரியல்ல.

7. கிருஷ்ணா சுவீட்ஸ் கடையில் எதிர்மனுதாரர் வேலை தான் செய்து வந்தார் என்றாலும், வயது முதிர்வு , உடல்நிலை காரணமாக வேலையை விட்டு நின்று விட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு வருமானம் வருவதற்கு ஆதரவாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

8. எதிர்மனுதாரருக்கு வருமானம் இல்லை என்றாலும், அவருடைய மகன்கள் தான் பராமரித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர், மனுதாரரை வீட்டை விட்டு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. சார்பு நீதிமன்றத்தில் மனுதாரர் சொத்து வேண்டும் என்று தாக்கல் செய்த வழக்கில் நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான்.

9. எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சொத்துக்களை தன் பெயரில் எழுதிவைக்க வேண்டும் என்று மனுதாரர் கேட்டு எதிர்மனுதாரர் மறுத்துவிட்டதால் மனுதாரர் வீட்டை விட்டு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு இருதய மற்றும் மூலம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

10. வயதான காலத்தில் எதிர்மனுதாரர் பார்த்துக்கொள்ள மனுதாரருக்கு சொல்லி, அறிவிப்பு அனுப்பியும் மனுதாரர் மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மனுதாரரை அடித்து துரத்திவிட்டார்கள். எதிர்மனுதாரர், மனுதாரருக்கு சொத்தை எழுதி வைத்தால் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வாரா என்றால் மனுதாரரை தான் கேட்க வேண்டும்.

11. எதிர்மனுதாரருக்கு 5 கோடி வந்ததாக பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர் மீது போலீசியில் புகார் கொடுக்கவில்லை என்றால் கொரனா என்பதால் கொடுக்கவில்லை. கொரனா காலகட்டத்தில் போலீசார் 24 மணிநேரமும் பணியில் இருந்தார்கள் என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12. எதிர்மனுதாரரிடம் சொத்தை வாங்கி வர நான் தான் மனுதாரரை துண்டி வாழவிடாமல் செய்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் பார்த்துக்கொள்ள தயாராக இருந்தால் மனுதாரர் வாழ தயாராக உள்ளாரா என்றால் மனுதாரருக்கு தான் தெரியும். என்ன பரிகாரம் மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

13. எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் அதற்கு மனுதாரர் தான் பதில் சொல்ல வேண்டும்.எதிர்மனுதாரருக்கு வருமானம் இல்லை என்பதால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.
Sd/–K.Ramkumar.M.L
Judicial Magistrate No.I,
Arakkonam.